பாடம் 3

# Present Simple Tense of Verb ‘to Be’

## ‘to be’ என்ற வினைச் சொல்லின் எளிமையான நிகழ் காலம்

‘to be’ என்ற வினைச் சொல், ஆங்கில மொழியிலுள்ள மிக முக்கிய வினைச் சொல்லாகும். ‘He’ என்ற சொல்லை ஆண் பால், ஒருமைக்கு மட்டுமே பயன்படுத்துவோம். அதே போல, ‘She’ என்ற சொல்லைப் பெண் பால், ஒருமைக்கு மட்டுமே பயன்படுத்துவோம். அ.்.றிணை ஒருமைப் பெயர்ச் சொல்லுக்கு **‘It’** என்பதைப் பயன்படுத்த வேண்டும்.

எனவே, எல்லா விலங்குகளுக்கும் பொருட்களுக்கும் **‘It’** என்பது பயன்படுத்தப்படுகின்றது. ஆண்களுக்கும் பெண்களுக்கும், பிராணிகளுக்கும், பொருட்களுக்கும் பயன்படுத்தப்படும் பன்மைச் சொல் **‘They’**.

‘to be’ என்ற வினைச் சொல், பின்வரும் விதத்தில் மாற்றமடையும்.

அதாவது, ‘to be’ என்ற வினைச் சொல்லின் வினை வடிவங்கள் பின்வருமாறு:

| **Regular Form**<br>ஒழுங்குமுறைப்பட்ட வடிவம் | **Contracted Form**<br>சுருக்கப்பட்ட வடிவம் |
|---|---|
| I **am** | I’**m** |
| You **are** | You’**re** |
| He **is** | He’**s** |
| She **is** | She’**s** |
| It **is** | It’s |
| We **are** | We’**re** |
| They **are** | They’**re** |

ஆங்கில மொழியில் எழுதும்போது, வழமையாக, சுருக்கப்பட்ட வடிவத்தையே நாம் உபயோகிக்கின்றோம். நீங்கள், **‘I am’** என்று எழுதினாலும், **‘I’m’** என்று எழுதினாலும், இரண்டுமே ஒன்று தான்; இரண்டுமே சரியானவை தான். எந்த வடிவம் உங்களுக்கு இலகுவாக இருக்கின்றதோ, அந்த வடிவத்தை நீங்கள் தெரிவு செய்து, பயன்படுத்தலாம்.